**கவனிக்க.-** 05.04.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1754 - 2012 අප්‍රේල් මස 11 වැනි බදාදා - 2012.04.11

1754 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 405 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஏப்பிறல் மாதம் 05 ஆந்திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010 (2012)
## மற்றும்
## இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2011 (2012)

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ்வறிவித்தலில் 'செயலாளர்' என்ற பதம் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும். "சேவை" என்ற பதம் இலங்கை நிருவாக சேவை எனப்பொருள்படும்.

2. **எழுத்துப் பரீட்சை.**- இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010 மற்றும் இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2011 இற்கு ஒரு போட்டிப் பரீட்சை மாத்திரம் நடத்தப்படும். இப்பரீட்சை கீழ்குறிப்பிடப்படும் வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும் :-

(i) பொது நிர்வாகம் ;
(ii) நிதி ஒழுங்கு விதிகள் ;
(iii) விடய ஆய்வு.

பரீட்சைத் திகதி.- இப்பரீட்சை 2012, யூலை மாதம் கொழும்பு நகரில் நடைபெறும். இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின்கீழ் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

வாய்மொழிப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றியும் ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் ஆகக் குறைந்த 40 வீத புள்ளிகளைப் பெற்றவர்களும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் போதுமானதென விதித்துரைக்கப்படுகின்ற உயர்மட்ட மொத்தப் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். வாய்மொழிப் பரீட்சை நடத்தப்படும் தினம் செயலாளரால் தீர்மானிக்கப்படும்.

3. **நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கை.**- இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010, 64 வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும், இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2011, 29 வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி.- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொண்டுள்ள அல்லது இதன் பிறகு மேற்கொள்கின்ற திருத்தங்களுக்கும் அமைவாக தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ஒருவர் இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு நியமனம் செய்யப்படுவார்.

4.1 தமக்கு அளிக்கப்பட்ட பதவியில் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறுகின்ற மற்றும்/அல்லது நியமனம் செய்யப்படும் பதவியில் அல்லது நியமனம் செய்யப்படும் பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கின்ற அல்லது தவிர்க்கின்ற விண்ணப்பதாரிகளின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

5. **கட்டமைப்பும் மாதாந்த வருடாந்த சம்பள அளவுத்திட்டமும் :**

| | | |
|---|---|---|
| விசேட தரம் : | ரூபா 42,390 - 12 × 1,310 | - ரூபா 58,110 |
| வகுப்பு I : | ரூபா 36,755 - 17 × 1,050 | - ரூபா 53,555 |
| வகுப்பு II : | ரூபா 30,175 - 8 × 790 | - ரூபா 35,705 |
| வகுப்பு III : | ரூபா 22,935 - 10 × 645 | - ரூபா 29,385 |

(நியமனத் திகதியிலிருந்து 03 ஆண்டு காலத்திற்குள் I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலும், நியமனத் திகதியிலிருந்து 06 ஆண்டு காலத்திற்குள் II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டுமென்பதுடன் நியமனம் கிடைக்கப்பெற்று 5 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 இன்படி இரண்டாம் மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும்.)

இப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவது இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆகும்.

6. **தகைமைகள் :**

6.1 இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010 இப்பந்தியின் இறுதியிலுள்ள குறிப்புக்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக -

(அ) (i) 2010.12.31 ஆந் திகதியில் 6.3 பந்தியில் குறிப்பிட்ட சேவைகளில்/ தரங்களில் உறுதிப்படுத்தப்பட்ட அரச அலுவலர் ஒருவராதல் வேண்டுமென்பதுடன்,

(ii) 2010.12.31 ஆந் திகதியில் அத்தகைய சேவைகளில்/ தரங்களில் ஏதேனும் ஒன்றில் அல்லது அதற்கு மேறப்பட்ட எண்ணிக்கைகளில் 10 வருடங்களுக்குக் குறையாமல் தொடர்ந்தும் நிரந்தரமாகவும் சேவையாற்றியவராக இருத்தல் வேண்டும்

அல்லது

(ஆ) (i) 2010.12.31 ஆந் திகதியில் 6.3 ஆம் பந்தியில் குறிப்பிட்ட சேவைகளில்/ தரங்களில் உறுதிப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தராக இருக்க வேண்டியதுடன் அத்தகைய சேவைகளில்/ தரங்களில் ஏதேனும் ஒன்றிலோ அதற்கு மேலோ 5 வருடங்களுக்குக் குறையாமல் தொடர்ந்தும் நிரந்தரமாகவும் சேவையாற்றியவராக இருத்தல் வேண்டும் என்பதுடன்,

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (அ) பல்கலைக்கழகப் பட்டம் வலுப்பெறும் திகதியானது 2010.12.31 ஆந் திகதி அதற்கு முன்னரான ஒரு திகதியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அன்றைய திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்படி 6.1 அ (i) மற்றும் (ii) அல்லது 6.1 ஆ (i) மற்றும் (ii) என்பவற்றில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தி சிறந்த ஒழுக்கமுடையவராகவும், நல்லாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) ஏதேனுமொரு சமயக்கிளையில் மதகுரு அந்தஸ்த்தில் உள்ள நபரெவரும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6.2 இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2011 இப்பந்தியின் இறுதியிலுள்ள குறிப்புக்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக -

(அ) (i) 2011.12.31 ஆந் திகதியில் 6.3 பந்தியில் குறிப்பிட்ட சேவைகளில்/ தரங்களில் உறுதிப்படுத்தப்பட்ட அரச அலுவலர் ஒருவராதல் வேண்டுமென்பதுடன்,

(ii) 2011.12.31 ஆந் திகதியில் அத்தகைய சேவைகளில்/ தரங்களில் ஏதேனும் ஒன்றில் அல்லது அதற்கு மேறப்பட்ட எண்ணிக்கைகளில் 10 வருடங்களுக்குக் குறையாமல் தொடர்ந்தும் நிரந்தரமாகவும் சேவையாற்றியவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) (i) 2011.12.31 ஆந் திகதியில் 6.3 ஆம் பந்தியில் குறிப்பிட்ட சேவைகளில்/ தரங்களில் உறுதிப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தராக இருக்க வேண்டியதுடன் அத்தகைய சேவைகளில்/தரங்களில் ஏதேனும் ஒன்றிலோ அதற்கு மேலோ 5 வருடங்களுக்குக் குறையாமல் தொடர்ந்தும் நிரந்தரமாகவும் சேவையாற்றியவராக இருத்தல் வேண்டும் என்பதுடன்,

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (அ) பல்கலைக்கழகப் பட்டம் வலுப்பெறும் திகதியானது 2011.12.31 ஆந் திகதி அதற்கு முன்னரான ஒரு திகதியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அன்றைய திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்படி 6.2 அ (i) மற்றும் (ii) அல்லது 6.2 ஆ (i) மற்றும் (ii) என்பவற்றில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தி சிறந்த ஒழுக்கமுடையவராகவும், நல்லாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) ஏதேனுமொரு சமயக்கிளையில் மதகுரு அந்தஸ்த்தில் உள்ள நபரெவரும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6.3 **சேவைகளும் தரங்களும்**.- (அ) இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பின்வரும் இணைந்த சேவைகளில் ஏதேனும் ஒன்றில் உள்ள அலுவலர் ஒருவர் ;

அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் அலுவலர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் நூலகர்கள்.

(ஆ) பின்வரும் எழுதுநர் சேவைகளில் ஏதேனும் ஒன்றில் உள்ள அலுவலர் ஒருவர்.-
புகையிரதம், அரசாங்க அச்சகம், சுகாதாரம்.

(iii) பின்வரும் திணைக்களத் தரங்களைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய தரமொன்றில் சேவையாற்றிய பின்னர் மாகாண அரச சேவையின் சமமான தரமொன்றுக்கு உள்ளீர்க்கப்பட்ட ஒரு அலுவலர் :-

| தொடர் இல. | திணைக்களம்/அமைச்சு | தரம் |
|---|---|---|
| 1. | எல்லா அமைச்சுக்களும் | உதவிச் செயலாளர் (இ. நி. சே. சாராத)<br>பொது உறவு அலுவலர் |
| 2. | இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு | உதவிப் பணிப்பாளர் (விளையாட்டு)/மாவட்ட விளையாட்டு அலுவலர்/ விளையாட்டு அலுவலர் |
| 3. | நிதி திட்டமிடல் அமைச்சு, கொள்கை, திட்டமிடல் மற்றும் செயற்படுத்துகைத் திணைக்களம் | கருத்திட்ட அலுவலர், புள்ளிவிபர அளவை அலுவலர், புள்ளிவிபர உதவியாளர், திட்டம் செயற்படுத்துகை அலுவலர் |
| 4. | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் | சிரேட்ட அதிகாரம்பெற்ற அலுவலர், அதிகாரம்பெற்ற அலுவலர் |
| 5. | ஆட்பதிவுத் திணைக்களம் | உதவி ஆணையாளர் (திணைக்களத்துடனான) |
| 6. | தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் | புள்ளி விபர புலனாய்வாளர் |
| 7. | சுதேச மருத்துவ அமைச்சு, ஆயுர்வேத திணைக்களம் | மருத்துவமனைச் செயலாளர், புலனாய்வு அலுவலர் |
| 8. | சமூக சேவைகள் அமைச்சு,<br>சமூக சேவைகள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்துடனான)<br>நலனோம்பல் மற்றும் சமூக நலனோம்பல் கண்காணிப்பாளர்,<br>வயது வந்தோர், வலுக்குறைந்தோருக்கான அரச<br>விடுதிக் கண்காணிப்பாளர், சமூக சேவை அலுவலர் |
| 9. | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் | தலைமை ஆசிரியர், தலைமை ஆசிரியை, நன்னடத்தை அலுவலர்,<br>விடுதிக் காப்பாளர், விடுதிப்பாலகர் (ஆண்),<br>விடுதிப்பாலகர் (பெண்) |
| 10. | காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,<br>காணி ஆணையாளர் திணைக்களம் | காணி அலுவலர்/மாவட்ட காணி அலுவலர் (திணைக்கள) காணி பயன்பாட்டு திட்ட அலுவலர்/கச்சேரி நில அளவையாளர்/குடியேற்ற அலுவலர் |
| 11. | அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | கிராம அலுவலர் |
| 12. | அரச கரும மொழித் திணைக்களம் | ஆராய்ச்சி உதவியாளர்/மொழிபெயர்ப்பாளர் |
| 13. | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | உதவி ஆணையாளர் (திணைக்களத்துடனான) |
| 14. | கிராமிய கைத்தொழில், சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு,<br>புடவைக் கைத்தொழில் திணைக்களம் | கைத்தொழில் உதவியாளர், பொது முகாமையாளர்,<br>முகாமைத்துவ உதவியாளர், பொருளாதார உதவியாளர்,<br>தொழில்நுட்ப உதவியாளர் |
| 15. | சுகாதார அமைச்சு | மருத்துவமனைச் செயலாளர், திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித் திட்ட அலுவலர், பொதுச் சுகாதார பரிசோதகர்,<br>பதிவு செய்த உதவி மருத்துவ அலுவலர் |
| 16. | உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு<br>மாகாண சபைகள் திணைக்களம் | உதவி ஆணையாளர் (திணைக்களத்துடனான) உள்ளூராட்சி எழுதுநர், மொழிபெயர்ப்பாளர், சிறாப்பர், சுருக்கெழுத்தாளர்,<br>தட்டெழுத்தாளர், பண்டகசாலைக் காப்பாளர் |
| 17. | வர்த்தக, சந்தைப்படுத்தல் விருத்தி, நுகர்வோர் விவகார அமைச்சு<br>அளவைக் கூறு, தரநிர்ணயங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | நிறைகள், அளவுகள் பரிசோதகர், விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் |

| தொடர் இல. | திணைக்களம்/அமைச்சு | தரம் |
|---|---|---|
| 18. | விவசாய அமைச்சு<br>விவசாயத் திணைக்களம்<br>கமநல சேவைகள் திணைக்களம் | விவசாய ஆலோசகர், பிரதேச அலுவலர், உதவி ஆணையாளர் (திணைக்களத்துடனான) |
| 19. | நீதி அமைச்சு<br>சட்ட வரையுள் திணைக்களம், உயர் நீதிமன்றம் | மொழி பெயர்ப்பாளர், வெளியீட்டு உதவியாளர், சுருக்கெழுத்தாளர் |
| 20. | போக்குவரத்து அமைச்சு<br>மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | மோட்டார் வாகனப் பரிசோதகர் |
| 21. | நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு<br>நீர்ப்பாசன திணைக்களம் | திட்டமிடல் உதவியாளர் |
| 22. | தேசிய மரபுரிமைகள் அமைச்சு<br>கலாசார அலுவல்கள் அமைச்சு,<br>தேசிய நூதனசாலை,<br>கலாசார அலுவல்கள் திணைக்களம் | கலாசார அலுவலர்கள் |
| 23. | கல்வி அமைச்சு | மாணவர் விடுதி கண்காணிப்பாளர் |
| 24. | தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சு<br>அரசாங்கத்தின் தகவல் திணைக்களம்<br>அரசாங்கத்தின் அச்சகம் | பதிப்பு அலுவலர், ஒப்புநோக்குநர் (சரவையிடுநர்) |
| 25. | தபால் தொலைத்தொடர்பு அமைச்சு<br>தபால் திணைக்களம் | ரீ 3-5-1 மற்றும் ரீ-3-4 சம்பள அளவுத் திட்டத்தில் உள்ள இணைந்த தபால் சேவை அலுவலர்கள், இணைந்த தபால் சேவையின் தபால் சேவை அலுவலர்கள் (ஆ 1) |
| 26. | மீன்பிடித்துறை நீர்வளங்கள் அமைச்சு<br>மீன்பிடித்துறை நீர்வளங்கள் திணைக்களம் | மீன்பிடி உதவியாளர் |
| 27. | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | மாவட்ட அலுவலர்/கூட்டுறவுச் சங்க பரிசோதகர் |
| 28. | உணவு ஆணையாளர் திணைக்களம் | உணவுக் கட்டுப்பாட்டு பரிசோதகர் (முன்னர் உணவு மற்றும் விலைப் பரிசோதகர்) |

(ஈ) மாகாண அரசாங்க சேவையின் மேல்காட்டப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பின்வரும் ஏதேனும் சேவையைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் :-

எழுதுநர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், சிறாப்பர், கணக்குப் பதியுநர், மொழிபெயர்ப்பாளர், பண்டகசாலைக் காப்பாளர், நூலகர்

(உ) மாகாண அரசாங்க சேவைகளின் மேல்காட்டப்பட்டுள்ள அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பின்வரும் ஏதேனும் சேவையைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் :-

அரசிறை பரிசோதகர், தொழில் நலனோம்பு அலுவலர், நிறைகள் அளவைகள் பரிசோதகர், கொழும்பு மாநகர சபையின் அறக்கொடை புண்ணிய ஆணையாளர், திணைக்களத்தின் சலுகை அலுவலர், பதவி நிலை அலுவலர் மற்றும் செயலாளர், முகாமைத்துவச் சேவை அலுவலர், உள்ளூராட்சி அலுவலர்

(ஊ) இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பதவிகளுக்கு உரிய அலுவலர்கள் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வது சட்ட விரோதமாவதுடன் (பதவிப் பெயர்களில் மாற்றம் ஏற்படுதல் காரணமாக புதிய பதவிகளுக்கு உள்ளீர்ப்புச் செய்துள்ள அலுவலர்கள் தவிர) அவர்கள் ஏதேனும் முறையில் பரீட்சைக்கு தோற்றினாலும் நியமனத்திற்காக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு**.- (i) தகைமை பூர்த்திசெய்யும் தினத்துக்கு உடன் முன்னரான 05 ஆண்டு காலப்பகுதியில் திருப்திகரமான சேவை அறிக்கை இல்லாதுவிடின் பரீட்சைக்கு தோற்றினாலும் நியமனங்களுக்காக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(ii) விண்ணப்பதாரர் ஒருவர்-

(அ) தகைமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய திகதிக்கு உடன் முன்னரான 05 ஆண்டு காலப்பகுதிக்குள் சகல சம்பள ஏற்றங்களையும் உரிய திகதியில் உழைத்துப் பெற்றும் ; மற்றும்

(ஆ) இக்காலப் பகுதியில் புரியப்பட்ட ஏதேனும் குற்றத்திற்காக (எச்சரிக்கை தவிர்த்து) தண்டிக்கப்படாமலும் இருந்தால் அவர் திருப்திகரமான சேவையை ஆற்றியுள்ளார் என கருதப்படும்.

(iii) விண்ணப்பம் கோரப்படும் முடிவுத் திகதியில் பணித்தடை செய்யப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் தகுதியற்றவர் ஆவார்.

(iv) இலங்கை நிருவாகச் சேவை பிரமாணக் குறிப்பில் 5(1) அல்லது 5(2) இன் பிரகாரம் போட்டிப் பரீட்சைக்காக இரண்டு முறைக்கு மேலதிகமாக தோற்றுவதற்கு எவரொருவருக்கும் அனுமதி கிடையாது.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குரிய கட்டணம் 1,000 ரூபாவாகும். அது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்ட செயலகம்/பிரதேச செயலகம் என்பவற்றில் வருவாய்த் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைத்தல் வேண்டும். மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் என்பவற்றில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இறுதியில் உள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அதனை கடதாசியின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி A4 அளவிலான கடதாசியில் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 3.12 வரை முதலாம் பக்கத்திலும் 4.0 தொடக்கம் 6.0 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனையவை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டுமென்பதை விசேடமாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தமது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத விண்ணப்பப்படிவங்களும் முழுமைபெறாத தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தில் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் காட்டப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளது என்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தியால் விண்ணப்பிக்கப்படும் பரீட்சை/பரீட்சைகள் விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(இ) பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் அத்தியாவசியமாகும்.

(ஈ) பரீட்சைக்காக பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவத்தைப் பதிவுத்தபாலில் திணைக்களத் தலைவர் ஊடாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம் (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளை), பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு 2012, மே 14 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2010/2011" என்ற சொற்களை தெளிவாக குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அன்றைய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(உ) எல்லா அம்சங்களிலும் நிறைவுபெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிடுதல், தாமதிக்கப்படுதல் என்ற முறைப்பாடுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது.

(ஊ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக பரீட்சை திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு என்பவற்றின் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகள் பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பின் வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதம் என்பவற்றை தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்**.- (அ) விண்ணப்பங்களை அனுப்பிய யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி அவரது அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்குக் குறித்து ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தாம் பரீட்சைக்கு தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையைக் கையளித்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட விதிமுறை இவ்வர்த்தமானியின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி அமைந்தொழுகுதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளுவதாக கருதலாகாது.

10. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- பரீட்சார்த்தி தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தில் நிரூபித்துக் காட்டுதல் வேண்டும். இந்த நோக்கத்திற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்கள் அளிப்பதற்கு தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் காணப்பட்டால் அவரது பரீட்சார்த்த உரிமை எந்தக் கட்டத்திலாயினும் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ பரீட்சைக்குப் பின்னரோ இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தி அளித்த விபரங்களில் எவையேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பொய்யானவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது அவர் எவையேனும் முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

12. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதாவது விடயம் இருப்பின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயலாளர் தீர்மானித்தபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சை மொழி மூலம் :-

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) பரீட்சார்த்தி அரசாங்க சேவையில் சேருவதற்கான தகைமைப் பரீட்சையை/நேர்முகப் பரீட்சையை எந்த மொழியில் சித்தியடைந்தாரோ அந்த மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் அல்லது அரச கரும மொழியில் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு** :

(i) பரீட்சார்த்தி பரீட்சையின் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுதுதல் வேண்டும்.
(ii) பரீட்சார்த்தி விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

14. **சோதிக்கும் முறை** :

(அ) கீழ்க்குறிப்பிடும் விடயங்களை உள்ளடக்கிய எழுத்திலான வினாத்தாளைக் கொண்டிருக்கும் :

| | | |
|---|---|---|
| பொது நிர்வாகம் | (3 மணித்தியாலங்கள்) | - 100 புள்ளிகள் |
| நிதி ஒழுங்குவிதிகள் | (3 மணித்தியாலங்கள்) | - 100 புள்ளிகள் |
| விடய ஆய்வு | (2 மணித்தியாலங்கள்) | - 100 புள்ளிகள் |

**குறிப்பு** : ஒவ்வொரு விடயங்களுக்கும் கொடுக்கப்படும் வினாத்தாள்களிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும் :

(ஆ) வாய்மொழித் தேர்வு பரீட்சை - 25 புள்ளிகள்

எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களுள் தகைமை பெற்றவர்கள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக் குறைந்த 40% வீத புள்ளிகளைப் பெற்றவர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் போதுமானதென விதித்துரைக்கப்படுகின்ற உயர்மட்ட மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்களுமான பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படுவர். மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகள் போதிய அளவு இருப்பார்களாயின் வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கான பரீட்சார்த்திகள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர்.

(புள்ளிகள் வழங்கும் முறை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படும்.)

**குறிப்பு** :

(i) மேற்கூறிய தகைமை பெறும் பரீட்சார்த்திகள் போதுமானதாக இருந்தால் இரண்டு வருடங்களினதும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கான பரீட்சார்த்திகள் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
(ii) வெற்றிடங்களின் எண்ணிக்கை, எழுத்து மற்றும் வாய்மொழிப் பரீட்சைகளில் பெற்றுள்ள திறமை, ஒழுங்கு அடிப்படையில் குறித்த வருடங்களில் தகைமை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என பரிசீலித்து வெற்றிடங்கள் நிரப்பப்படும். அதன்படி 2010 ஆம் வருடத்தின் வெற்றிடங்களுக்கு அதிஉயர் புள்ளிபெற்ற மற்றும் 2010 ஆம் வருடத்தில் தகைமைகள் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்படும்.

(iii) இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்தி ஒரு பரீட்சைக்கு தோற்றியதாக கணக்கிடப்படும். இந்தப் பரீட்சையில் இரண்டு சந்தர்ப்பங்களுக்காகவும் விண்ணப்பித்த சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் 2010 ஆம் வருடத்தின் தகைமைகளே கருத்தில் கொள்ளப்படும்.

(iv) வாய்மொழித் தேர்வுக்காக அழைத்தலானது நியமனத்திற்கான தகைமைகளை பூர்த்திசெய்ததாக கருதப்பட மாட்டாது. பூர்த்தி செய்யப்படுகின்ற வெற்றிட எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ளவாறாகும்.

15. **பாட விதானம்.**- (அ) *பொது நிர்வாகம்.*- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதி அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகள் மற்றும் பின்வரும் அத்தியாயங்களின் மீது விசேட கவனம் செலுத்தி தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், அலுவலக பரிச்சயம், அலுவலக முறைகள் மற்றும் தற்காலத்தில் உபயோகிக்கப்படும் சுற்றறிக்கை அறிவுரைகள் பற்றி பரீட்சார்த்தி அடைந்துள்ள அறிவையும் புரிந்துணர்வையும் சோதிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது :-

V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

(ஆ) *நிதி ஒழுங்கு விதிகள்:*

(i) அரசாங்க நிதி ஒழுங்கு விதிக்கோவை பகுதி I (X அத்தியாயம் தவிர்ந்த).
(ii) நடப்பாண்டின் மதிப்பீடுகள் - அவற்றைத் தயாரித்தல், வருமானத் தலைப்புகள், நிதி மற்றும் ஒதுக்கீடு.
(iii) கச்சேரிகளுக்கு உரியதான விசேட கணக்குகளுக்கு உரிய கட்டளைச் சட்டங்கள்.

(இ) *விடய ஆய்வு.*- பரீட்சார்த்தியின் ஆக்கபூர்வமான சிந்தனா சக்தியையும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆற்றலையும் சோதிக்கும் வகையில் இந்த வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பரீட்சார்த்தி தீர்வு வழங்குவதற்காக சந்தர்ப்பம் ஒன்றை அல்லது அதைப் பார்க்க கூடியவற்றை தொடர்புபடுத்தி உருவாக்கப்பட்ட பிரச்சினைகள் அவருக்கு முன்வைக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2012, மாச்சு மாதம் 28 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
அலுவலக உபயோகத்திற்காக

**இலங்கை நிருவாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010 (2012)**
**மற்றும்**
**இலங்கை நிருவாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2011 (2012)**

LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO CLASS III OF SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2010 (2012)

LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO CLASS III OF SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2011 (2012)

1.0 மொழி மூலம் :
பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் : [ ]
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும்.

2.0 விண்ணப்பிக்கும் பரீட்சை :
இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை.

2010 - 1 [ ]

2011 - 2 [ ]

(உரிய இலக்கத்தை/இலக்கங்களை கூட்டினுள் இடவும்)
வருடங்களுக்கும் தகைமைகள் பூர்த்திசெய்திருந்தால் இரண்டு வருடங்களுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3.0 தனிப்பட்ட தகவல்கள் .-

3.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
உதாரணம் : SILVA, A. B.

3.2 முழுப்பெயர் ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் :-----.

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.4 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிடப்படும்) :-----.

3.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.6 சொந்த முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.7 பெண்/ஆண் (ஆண் - 0, பெண் - 1) :- ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

3.8 திருமணமானவரா? திருமணமாகாதவரா? (திருமணமாகாதவர் -1, திருமணமானவர் - 2) :- ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

3.9 இனம் (சிங்களம் -1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5) :- ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

3.10 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.11 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

3.12 தொலைபேசி இலக்கம் (இருக்குமானால்) : ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 நீங்கள் சேவைக்கு/தரத்திற்கு உட்சேர்வதற்காக தகைமைகள் பெற்ற பரீட்சை/நேர்முகப் பரீட்சை, சித்தியடைந்த மொழியை குறிப்பிடவும் : -----.

5.0 (i) வர்த்தமான அறிவித்தலின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சேவைகள் திணைக்கள தரங்களில் உமது சேவை/தரம் (வகுப்பு, தரம் அல்லது பிரிவு ஏதேனும் இருப்பின்) தருக (நீர் ஒன்றுக்கு மேற்பட்ட தகுதியுடைய சேவைகளில்/தரங்களில் சேவையாற்றி இருந்தால் அத்தகைய சேவைகள்/தரங்கள் திகதிகளுடன் குறிப்பிடுதல் வேண்டும்) :-----.

(அ) தற்போது வகிக்கும் பதவி :-----.
பதவி எச்சேவையைச் சேர்ந்தது (அரச சேவை/மாகாண அரச சேவை) :----.
தரம் :-----.
வகுப்பு/பிரிவு :-----.
பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :-----.
அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :-----.
பட்டம் பெற்ற திகதி :-----.

(ஆ) தகுதிகளுக்கான வேறு சேவைகள், தரங்கள் இருப்பின் :-

| சேவை/தரத்தின் பெயர் | நியமிக்கப்பட்ட திகதி | உறுதி செய்யப்பட்ட திகதி | சேவைக்காலம் | |
|---|---|---|---|---|
| | | | தொடக்கம் | வரை |
| (1) ................................ | ...................... | ...................................... | ................... | ............. |
| (2) ................................ | ...................... | ...................................... | ................... | ............. |
| (3) ................................ | ...................... | ...................................... | ................... | ............. |
| (4) ................................ | ...................... | ...................................... | ................... | ............. |
| (5) ................................ | ...................... | ...................................... | ................... | ............. |

(ii) வர்த்தமானியில் 6 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள சேவைகளில்/தரங்களில் தகைமை பூர்த்திசெய்யும் தினத்தில் நிரந்தரமாகவும் தொடர்ச்சியாகவும் சேவையாற்றிய மொத்த சேவைக்காலம் :-----.

| | | |
|---|---|---|
| (i) 1988, யூன் மாதம் 7 ஆந் திகதிய 509/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பின்படி இதற்குமுன் பரீட்சைக்குத் தோற்றிய வருடம் | ..................................... ..................................... ..................................... ..................................... | |
| (ii) 2005, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பின்படி 2005.01.01 இற்கு முன் பரீட்சைக்குத் தோற்றிய வருடம் (தற்போது வலுவிலிருக்கும் ) | | தோற்றியுள்ளேன்/ தோற்றவில்லை |
| | 2007 திறந்த | ..................................... |
| | 2007 மட்டுப்படுத்தப்பட்ட | ..................................... |
| | 2009 திறந்த | ..................................... |
| | 2009 மட்டுப்படுத்தப்பட்ட | ..................................... |
| | 2010 திறந்த | ..................................... |

6.0 காசுப் பற்றுச்சீட்டை கழறாதவாறு ஒட்டுக :

| |
|---|
| பற்றுச்சீட்டை (உண்மைப்பிரதி) கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.<br>(நிழற்பட பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளவும்.) |

7.0 **பரீட்சார்த்தியின் உறுதியுரை**.- .................... ஆந் திகதிக்கு உடன் முன்னரான ஐந்துவருட காலப்பகுதியில் (சேவைகள் அல்லது திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடையும் நிபந்தனையான ஆண்டேற்றங்கள் நீங்கலாக) சகல ஆண்டேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளேன் என்பதையும் வர்த்தமானி அறிவித்தலின் 6.1(அ)/6.1 (ஆ) 6.2(அ)/6.2(ஆ) பந்திக்கு அமைவாக தொடர்ச்சியாகவும் நிரந்தரமாகவும் சேவைக்காலத்தைக் கொண்டுள்ளேன் எனவும், நான் இழைத்த ஏதேனும் தவறுக்காக (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகியிருக்கவில்லையென்பதையும் வெளிப்படுத்துகிறேன்.

இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவர் என்பதையும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்பதையும் இப்பரீட்சைக்குரிய கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதைக் குறிக்கும் முகமாக .......... ஆந் திகதியிட்ட .......... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்துகிறேன். நான் இப்பரீட்சைக்குரிய விதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய நான் தகுதியற்றவரென பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ பரீட்சைக்குப் பின்னரோ கண்டுபிடிக்கப்படுமிடத்து எனது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்வதற்கும் நான் உடன்படுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

8.0 **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (சுயவிபரக் கோவையின்படி)** :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..................... என்பவர் மத்திய அரச சேவைக்கு கீழ்வரும்/ .......................................... மாகாண சபைக்கு கீழ்வரும் .......................................... அமைச்சின்/திணைக்களத்தின் .......................................... பதவியில் சேவையாற்றுபவர் எனவும் ..................... ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருடகாலத்தில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சைகளில் சித்தியெய்தியடையும் நிபந்தனையான ஆண்டேற்றங்கள் நீங்கலாக) எல்லா ஆண்டேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்பதையும், இக்காலப்பகுதியில் அவர் இழைத்த ஏதேனும் தவறுக்காக (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகியிருக்கவில்லை என்பதையும் வர்த்தமானி அறிவித்தலின் 6.1(அ)/ 6.1(ஆ)/ 6.2(அ)/ 6.2(ஆ) பந்திக்கு அமைவாக தொடர்ச்சியாகவும் நிரந்தரமாகவும் சேவைக்காலத்தைக் கொண்டுள்ளார் எனவும், இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள், அறிக்கைகள் என்பவற்றின் மூலம் சரியானவை

எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென்பதையும் உரிய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு அமைவாக இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவர் தகுதியுடையவர் என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதையும், பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும், அவர் என் முன்னிலையில் இவ்விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின்/அதிகாரம்
பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.
(பதவி முத்திரை உட்பட)

*4-380*

---

## திருத்தம்

*1751 ஆம் இலக்க 2012, மாச்சு மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் II(அ) பிரிவின்கீழ் வெளியான இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை - 2012 இன்கீழ் வெளியான அறிவித்தலில் -*

5 ஆம் பிரிவின் தகைமைகளின்கீழ் ஈ பந்தியில் குறிப்பிடப்பட்ட 2012.03.23 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று) 22 வயதிற்குக் குறையாதவராகவும், 28 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் என்பதனை 2012.03.23 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாதவராகவும், 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டுமென திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

7 ஆம் பிரிவில் விண்ணப்பிக்கும் முறையின்கீழ் (இ) மற்றும் (ஈ) இன்கீழ் 2012.04.23 ஆந் திகதி என்று குறிப்பிடப்பட்டுள்ள திகதி 2012.04.30 என திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்கவேண்டிய தேவையில்லை.

*4-520*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.